திருச்சிற்றம்பலம்

# இயற்பகை நாயனார்

திருவடியார் பெருமையை சொல்லும் திருத்தொண்டத் தொகையில் நம்பி ஆருரன் நயமுற நவின்று அடுத்து சிறப்புறும் அடியார், இயற்பெயர் அறியாத நிலையில் இயல்பான சமூக வாழ்விற்கும் மாறாக திருத்தொண்டு மேற்கொண்டமையால் இயற்பகைநாயனார் என்று சிறப்புற அழைக்கப்பட்டவராவார். இயல்புக்குப் பகையானதே இவரின் இறையடிமைக்கு புகழானது.

சோறு உடைத்தாய சோழநாட்டின் சீரும், சிறப்பும் பெற்ற ஒரு வளமான நகரம் புகார் என்று புகழப்படும் காவிரிப் பூம்பட்டினம். இந்நகரில் தொன்மை வணிகர் குலத்தில் பிறந்து வற்றாத செல்வத்தைக் கொண்டு மேன்மை நெறி வாழும் அடியார் இயற்பகையார். எவரேனும் அவர் வேண்டியது, எவையாயினும் இல்லை என்னாது முன்னே கொடுக்கும் இயல்புடையார். நீறு பூசுகின்ற மேனியுடையார் தம் உள்ளத்தில் நினைத்தவையெல்லாம் நிறைவேற்றித் தந்து அவர்கள் இடும் ஏவலையே இறைக் கட்டளையாய் ஏற்று இல்லற நெறியோடு வாழ்ந்து வந்தார்.



அடியார் பெருமக்கள் எதைக் கேட்பினும் அதைக் கொடுக்கும் அருளாளர் இவர் என்பதை அவனி முழுவதும் அறியச் செய்ய வேண்டும் என்ற சிந்தையோடு சிற்றம்பலமுடையான் சிவபெருமான் அவர் அறியாது ஒரு தூர்த்த வேடதாரியாய் உருவெடுத்து இயற்பகையாரைஅணுகினார்.

எதிர் கொண்டு அழைத்த இயற்பகையாரிடம் வேடம் புனைந்து வந்த வேத நாயகன் "நீவிர் அடியார் வேண்டுவதை மறுக்காது அளிப்பீர் என அறிந்து இங்கு வந்தோம்.யாம் வேண்டுவதற்கு நீவிர் மனம் உவந்து இசை வீரானல் நாமும் எமது எண்ணத்தைப் பகர்வோம்." என்று விண்ணப்பம் வைத்தார். இது கேட்டு மகிழ்ந்த இயற்பகையார் இன்முகம் காட்டி, இன்சொல் கூட்டி, நீவிர் வேண்டுவது எதுவாயினும் அது எம்மிடம் இருக்குமாயின் அது இனி உம்முடையது. இதற்கு எவ்வித ஐயமுமில்லை, தயங்காது கேளுங்கள்" என்றார். அதற்கு எம்பெருமான், "நிலை பெற்ற காதலில் உன் மனைவியை வேண்டியே நான் இங்கு வந்தேன்" என்றார்.

இதைக் கேட்ட உடனேயே அதிர்ச்சி சிறிதும் கொள்ளாது அகமகிழ்ந்த இயற்பகையார், " என்னிடம் உள்ள ஒரு பொருளை நீவிர் கேட்கும் நிலை வந்தது எம்பெருமான் எனக்குத்தந்த பெரும் பேறாகும்" என்றார். இயற்பகையார் விரைந்து வீட்டினுள் சென்று விவரம் தெரிவித்தவுடன் இலக்குமியை மிஞ்சும் இயல்பினளான அவரது இல்லாள் அதைக்கேட்டு முதலில் கலங்கி பின் மனம் தெளிந்து, "என் உயிர்க்கணவராகிய நீங்கள் அருளிச் செய்தது எதுவாயினும் அதற்கு உடன் படுவதைத் தவிர எனக்கு என்ன சிறப்பு இருக்கிறது." என்ற கணவரை வணங்கி, இல்லின் முன்புறம் வந்து, எதிர் நின்ற மாதவரின் அடியை வணங்கி திகைத்து நின்றாள். மனம் கோணாத மனைவியாரை மாதவருக்குக் கொடுத்த இயற்பகையார், முன்னிலும் அதிகம் பொலிவுடன் " ஐயன்மீர் இனி நான் செய்வதுயாது" என்று வினவி வணங்கி நின்றார்.

"அடியார் பெருமானே, இவளை யாம் அழைத்துச் செல்லுங்கால் இவளிடமும், தங்களிடமும் உற்ற அன்பு பாராட்டும், சுற்றமும், நட்பும் எம்மை தடுத்திட முயலும் ஆகவே நீரும் உடன் வருதல் வேண்டும்" என்றார். இதனையே எம் மனத்திலும் யாம் எண்ணியிருந்தோம் என்று எண்ணிய இயற்பகையார், இல்லுள் சென்று ஒப்பற்ற ஆடைகளை அணிந்து இடையில் கச்சை கட்டி, உடைவாளும், கேடயப் பலகையும் ஏந்தி திண்ணிய நெஞ்சினராய் வெளியே வந்தார்.

இத்தகைய இழிசெயலைச் செய்யத் துணிந்து விட்டாரே இயற்பகையார்; குலத்திற்கு நீண்ட பழி வந்து சேருமே என்று பதைபதைத்த உற்றாரும் சுற்றமும் நகரின் எல்லையில் வழிமறைக்கும் எண்ணத்தில் வாளும், வில்லும்,வேலுமாக ஏந்தி எல்லையில் எதிர் வந்து வளைத்துக் கொண்டனர். வழியைக் காத்திடும் துணையாக வந்த இயற்பகையார் பின்னால் வர, வேதியார் பெரும் காதலைக் காட்டிக் கொண்டு அம்மையாருடன் சென்றார். அப்போது இயற்பகையாரை இடைமறித்த உற்றார்கள் " கொடியவனே, குலக் கொடியை விட்டு உன் செயலால் குலத்திற்கேற்படும் பழியையும் விட்டுச் செல்வாயாக" என்று அறை கூவல் விடுத்தனர்.

வேத நாயகன் அஞ்சுவது போல் நடித்து குல வஞ்சிக் கொடியாளை நோக்கவே, அவளும் "இறைவா அஞ்ச வேண்டியதில்லை இயற்பகை வெல்லும்" என்று உரைத்தனள். இயற்பகையாரோ, பற்றுடன் வந்த சுற்றாத்தாரைப் பார்த்து, " நீங்கள் ஒருவரும் என்முன் நில்லாது ஓடிப்போய் உயிர் காத்துக் கொள்ளுங்கள் இல்லையெனில் இறையவருக்கு இயன்றதை செய்யும் எம்பணிக்கு இடையூறு எவ்வகையில் வரினும் அப்பகை முடித்து பணி காப்பேன். உங்கள் அனைவரையும் வெட்டி வீழ்த்துவேன்" என்று ஆர்ப்பரித்தார். வேதியரைத் தடுத்த தம் சாதியினரை மோதி அழித்திட முனைந்து வாளெடுத்து சுழன்று சுழன்று போர் முடித்தார். உற்றவரையும் , மற்றவரையும் வெட்டி வீழ்த்தினார். வெட்டுப்பட்ட உடலிலிருந்து கொட்டித் தீர்த்த குருதி வெள்ளம் களம் நிரப்பி நின்றது. அனைவரும் சாய்ந்தப் பின் அடியார் மறையவரைப் பார்த்து " இந்தச் சோலையை நீவிர் கடந்து செல்வது வரை துணை வருவேன்" என்று உடன் சென்றார்.

அயனும் மாலும் அறிய வொண்ணா அம்பலவாணன் முன்செல்ல, அவரைத் தொடர்ந்து மங்கை நல்லாளும், பொருதிறல் வீரர் இயற்பகையார் பின்செல்ல அனைவருமாய் திருச்சாய்க் காட்டினை அணுகினர். அப்போது வேதியர் சினங்கொண்ட வேங்கையாய் சீறி நின்ற இயற்பகையாரைப் பார்த்து "இனி நீ செல்லலாம்" என்றார். வேதியார் இவ்விதம் கூறியதும் இயற்பகையார் அவரை வாயாரத் துதித்து கைமலர் குவித்து வணங்கி கண்மலர் பனித்து, " இப்பேரருளாளன் பெருமருளைப் பெறும் பேறுபெற்றேன்" என்று எண்ணி மீண்டார். திரும்பிப் பார்க்காமல் முன்சென்ற முறைமையை நினைந்து முற்றும் மகிழ்ந்த வேதியார் "பொய்தரும் உள்ளம் இல்லான் பார்க்கிலன் போனான்" என்று கருதி இயற்பகையாரே "உமக்கு ஓலம்' 'ஓலம்' என்று மீண்டும் அபயம் வேண்டி அழைத்தது போல் ஓலமிட்டார்.

இவ்வபயக் குரல் கேட்ட இயர்பகையார், மீண்டும் சுற்றத்தார் சுற்றி வளைத்தனரோ என்று பதைத்து 'இதோ வந்து விட்டேன்' என்று வீசிய வாளோடு விரைந்து வந்தார்.திரும்பி வந்த இயற்பகையார் முனிவரைக் காணார். தம் மனைவியாரை மட்டும் பார்த்தார். பொன்மயமான குன்று வெள்ளி மலையின் மீது விளங்கினார் போல அப்பொன்னார் மேனியன் சிவன் வெள்ளை ஊர்தியான காளையின் மீது தன் துணையான உமாதேவியோடு திருக்காட்சியருளினார். இக்காட்சியைக் கண்ட இயற்பகையார் பக்திப் பரவசத்தால் தரையில் வீழ்ந்தார், பின் எழுந்தார் இறைவனைத் துதி செய்தார். "தில்லைப் பொன்னம்பலத்தில் ஆடும் தங்கள் சேவடிகளுக்கு வணக்கம். எல்லையில்லாப் பெருங்கருனையால் என்னை ஆட்கொண்ட எம்பெருமானுக்கு வணக்கம். எளிய என்னை விரைந்து ஆட்கொள்ள வேண்டி எளி வந்த எம் தலைவனுக்கு வணக்கம்." என்று பலவாராகத் துதித்தார். இறைவன் " எண்ணிய இவ்வுலகத்தில் எம்மிடம் நீவிர் கொண்ட அன்பைக் கண்டு மகிழ்ந்தோம். குற்றமில்லாதவனே! குற்றம் சிறிதுமேயில்லாத உன் குலக்கொடியோடு நம்மிடத்துக்கு வருவாயாக" என்று அருள் பாலித்தார்.

வானவர் பூவின் மாரிபொழிய, மறைகள் ஆர்ப்ப, ஞான முனிவர்கள் போற்ற இயற்பகையார் தம் இல்லாளோடு இறைவனை நீங்காமல் நிற்கும் பேறு பெற்றார்.அவரோடு பகைதொடுத்து உயிர் நீத்த உறவினர்கள் வீடு சொர்க்கத்தில் இன்பத்தை அடைந்தனர்.இயர்பகை நாயனார் தொண்டின் திறம் நிறைவு பெற்றது.

இன்புறுந் தாரந் தன்னை

ஈசனுக்கன்பர் குன்றே

துன்புறாது உதவும் தொண்டர்

பெருமையைத் தொழுது வாழ்த்துவாம்...(சேக்கிழார் சுவாமிகள்)

திருச்சிற்றம்பலம்